<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**<u>MCOP.No.58/2025</u>**

பெயர் : வீரப்பன் (PW1)

த/பெ. : வரதராஜன்

தேதி : 26.03.2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**:–

எனது தரப்பு ஆவணங்களாக எனக்கு ஜிப்மர் மருத்துவமனை வழங்கிய டிஸ்சார்ஜ் சம்மரி அசல் **ம.சா.ஆ7** ஆகவும், விபத்துக்கு பிறகு ஜிப்மர் மருத்துவமனையில் தொடர்ந்து வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வந்ததற்கான O.P.records அசல் **ம.சா.ஆ8** ஆகவும், மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவ பில்கள் (எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனைக்குட்பட்டு) அசல் **ம.சா.ஆ9** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

எனது வீட்டு முகவரி 2/54 மெயின் ரோடு, ஆத்தூர் அஞ்சல், மயிலாடுதுறை தாலுக்கா. எங்கு வேலை செய்கிறீர்கள் என்றால் சீர்காழி சபாநாயகம் முதலியார் இந்து மெட்ரிக் பள்ளியில் வேலை செய்து வருகிறேன். விபத்து எங்கு நடந்தது என்றால் சீர்காழி, திருக்கோலக்கா தெரு, மார்க்கோனி கார்டன் என்ற இடத்தில் நடந்தது. அந்த சாலை சிறிய சாலை இரண்டு பேருந்துகள் செல்லும் அளவிற்கு பெரிய சாலை இல்லை. ஆனால் பேருந்து செல்லும் அளவிற்கு உள்ள சாலை. விபத்து நடந்த இடத்தில் ஒரு வளைவு உள்ளது என்றால் சரிதான். மேற்கு நோக்கி வளைவு உள்ளது சரிதான். மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தேன் என்றால் சரிதான். அந்த இடத்தில் வேகத்தடை உள்ளதா என்றால் விபத்து நடந்த இடத்திலிருந்து 20 அடி துூரத்தில் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். பொதுவாக ஒரு வாகனம் சாலையில் செல்லும்போது வேகத்தடை இருந்தால் அதில் நிறுத்திதான் செல்லவேண்டும் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு விபத்து நடந்தது என்றால் காலை 09.30 மணிக்கு விபத்து நடந்தது.

விபத்து நடந்த இடத்திற்கும் நான் பணிபுரியும் பள்ளிக்கும் இடையே எவ்வளவு துூரம் இருக்கும் என்றால் 1 கிமீ துூரம் இருக்கும். நான் அன்று பள்ளிக்கு வேலைக்கு சென்றேன் என்றால் சரிதான். நான் விபத்திற்கு பிறகு முதலுதவி சிகிச்சைக்கு எங்கு சென்றேன் என்றால், சீர்காழி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றேன். எத்தனை மணிக்கு சீர்காழி மருத்துவமனைக்கு சென்றீர்கள் என்றால் காலை 09.45 மணிக்கு சென்றேன். விபத்து நடந்த இடத்திலிருந்து சீர்காழி மருத்துவமனைக்கு எவ்வளவு துூரம் என்றால் 1 கிமீ துூரம் இருக்கும், சீர்காழி

மருத்துவமனையில் OP சீட்டு வாங்கினேன் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எவ்வளவு நேரம் சீர்காழி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் 1/2மணி நேரம் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். எனக்கு வலது கையில் மூன்று விரல்கள் எலும்பு முறிவு, வலது மணிக்கட்டில் எலும்பு முறிவு, வலது கால் முட்டியில் சிறாய்ப்பு, வலது பக்க தலையில் காதுக்கு மேல் காயம், வலது பக்க தோள்பட்டையில் சிறாய்ப்பு காயம் நெஞ்சு மற்றும் விலாவில் உள்காயம் ஆகிய அனைத்தும் 1/2 மணிநேரத்தில் சிகிச்சை எடுத்தீர்களா என்றால் எனது வலது கையில் உள்ள முறிந்த விரலில் மட்டும் முதலுதவி சிகிச்சை எடுத்துவிட்டு என்னை அனுப்பிவிட்டார்கள்.

சீர்காழி மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்கு மருத்துவர் பரிந்துரை செய்த சீட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தெரியாது. மேல் சிகிச்சைக்கு எங்கு சென்றீர்கள் என்றால் சிதம்பரம் சென்றேன். அங்கு OP சீட் வாங்கினீர்களா என்றால் வாங்கினேன். அந்த OP சீட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தெரியாது. சிதம்பரத்தில் எவ்வளவு நேரம் சிகிச்சை மேற்கொண்டார்கள் என்றால் சிதம்பரம் அரசு ராஜாமுத்தையா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இரவு வரை அங்கு தங்கியிருந்தேன். சிதம்பரத்திலிருந்து பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு எப்போது சென்றீர்கள் என்றால் இரவு 10.00 மணியளவில் சென்றேன். சிதம்பரம் மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொள்ள காலதாமதம் ஏற்பட்டதால் தனியார் ஆம்புலன்ஸில் பாண்டிச்சேரிக்கு சென்றேன். 10.06.2023 அன்று அதிகாலை 03.00 மணிக்கு பாண்டிச்சேரியில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. மசாஆ7 ஆவணம் பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் 08.10.2024 தேதியில் நான் இரண்டாவது முறை அறுவை சிகிச்சை செய்யும்போது கொடுக்கப்பட்ட ஆவணமாகும்.

10.06.2023ல் நான் சிகிச்சைக்கு சென்றபோது என்ன என்ன சிகிச்சை மேற்கொண்டார்கள் என்றால் கை விரலில் முதலில் பார்க்க வேண்டும் என்று கூறினார்கள். எத்தனை நாட்கள் சிகிச்சை மேற்கொண்டீர்கள் என்றால் காலில் சிறு சிறாய்ப்பு காயம், தலையில் வாந்தி மயக்கம் இல்லாத காரணத்தினால் இட வசதி அங்கு இல்லாத காரணத்தினால் கை கால் விரல்கள் தான் முக்கியம் என்பதால் என்னை இரண்டு நாட்களில் அனுப்பிவிட்டார்கள். சிதம்பரத்தில் கையில் கட்டு போட்டார்கள் அதை ஜிப்மர் மருத்துவமனையில் கட்டு போட்டார்களா என்றால் 4 மணி நேரம் ஆப்பரேசன் செய்து பின்னர் கையில் கட்டு போட்டுவிட்டு இரண்டு நாட்கள் ICU வில் இருந்து என்னை பின்னர் டிஸ்சார்ஜ் செய்தார்கள். பின்னர் நான்கு மாதம் கழித்து சிகிச்சை மேற்கொண்டீர்கள் என்றால் நான்கு மாதம் கழித்து விரல் மடங்கவில்லை என்பதால் பின்னர் மறு ஆப்பரேசன் செய்தேன். போலீசார் எங்கு வந்து விபத்து சம்பந்தமாக விசாரித்தார்கள் என்றால் சீர்காழி மருத்துமனையில் விசாரணை மேற்கொண்டார்கள். உடன் வேலை பார்த்தவர்கள் உடன் இருந்தார்கள்,. பாண்டிச்சேரி சிகிச்சை மேற்கொண்டபோது போலீசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. நான்தனியார் பள்ளியில் வேலை செய்கிறேன் எனது சம்பளம் எவ்வளவு என்றால்

விபத்து சமயத்தில் அதிவேகமாகவும். அஜாக்கிரதையாகவும் வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.

நான் தான் செல்போன் பேசிக்கொண்டு அஜாக்கிரதையாக வாகனத்தை ஓட்டி வந்து மணலில் தடுமாறி விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. விபத்தில் விழுந்ததை பார்த்துவிட்டு 1ம் எதிர்மனுதாரரும் மற்றும் இரண்டு நபர்களும் சேர்ந்து சீர்காழி மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல உதவி செய்தார்கள் என்றாலும் அவ்வாறு உதவி செய்தவர்கள் மீதே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. போலீசார் விசாரணையில் கொடுங்காயம் ஏற்பட்டிருந்தால் சட்டப்பிரிவுகள் அதற்குரிய சட்டப்பிரிவுபோட்டிருப்பார்கள் என்றாலும் சாதாரண காயம் ஏற்பட்டிருந்ததால் தான் குறைந்த சட்டப்பிரிவுபோட்டிருப்பார்கள் என்றால் சரியல்ல. விபத்து நடந்து சாதாரண காயம் ஏற்பட்டதினால் நான் சீர்காழி மருத்துவமனைக்கே செல்லவில்லை. அப்படி சென்றிருந்தால் அங்கு OP சீட் கொடுத்திருப்பார்கள் அங்கு மருத்துவர் மேற்சிகிச்சைக்கு சீட் கொடுத்திருப்பார்கள். நான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பபேன் என்றால் சரியல்ல. நான் சிதம்பரத்திற்கு போய் சிகிச்சை மேற்கொள்ளவில்லை அவ்வாறு மேற்கொண்டிருந்தால் அதனையும் கோர்ட்டில் தாக்கல் செய்திருப்பேன். அங்கு செல்லாததால் தான் அந்த சீட்டையும் கோர்ட்டில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எனது கவனக்குறைவால் ஏற்பட்ட விபத்தினால் எனது கட்சிக்காரர் மீது அபாண்டமாக பழிசொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எனது கட்சிக்காரருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.